**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

-

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடனான இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 125,576,971 தொகையான மூலதன மானியங்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச துறையின் கணக்கீட்டு நியம குழுவினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது திருத்தமொன்று அல்ல முன்மொழிவே ஆகும். அதனால் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது இந்த முன்மொழிவினை கருத்தில் கொள்ளவில்லை. அரச கணக்காய்வு அலுவலகத்தின் அறிவுரைகள் வழங்கப்படின் அதற்கமைய 2022 ஆம் ஆண்டு முதல் அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் செயற்படுகின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காலி உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கு உபகரணங்களை விநியோகித்த வழங்குனருக்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 896,972 செலுத்த வேண்டிய போதிலும் அது ரூபா 4,940,400 ஆக கணக்கு வைப்பக்கப்பட்ட காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக | நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூட உபகரண உருப்படிகளுக்கிடையே 02 உருப்படிகள் உரிய நியமங்களுக்கு இணங்காத காரணத்தினால் 02 நியமத்திற்குரிய வகையிலான உருப்படிகளை மீள பெற்றுத்தருமாறு உறுதிப்படுத்தி குறித்த வழங்குனர் ரூபா 4,043,428 தொகையான 02 உருப்படிகளை மீள | நிறுவனத்திற்கு விநியோகிக்கப்படும் பொருட்களை பொறுப்பிற்கு எடுப்பதற்கு முன்னர் உரிய அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்கியுள்ளதா என்பதை பரிசோதித்த பின்னர் பொருட்களை பெற்றுக் கொண்டு |

| | | |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் வேலைத்தளங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களின் பெறுமதி மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,043,428 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அந்நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் பயிற்சி உபகரணங்களுக்குரியதாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,804,922 தொகை குறித்த சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அந்த அளவினால் வேலைத்தளங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களின் பெறுமதி குறைவாகவும் முற்பண மீதி அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுத்துச் சென்றிருந்தார். அந்த உபகரணங்களின் பெறுமதியை ஈடுசெய்து எஞ்சிய ரூபா 896,972 பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்த உரிய அதிகாரம் இதுவரை கிடைத்திராததுடன் இது தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கமைய சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே பொருட்களை கொள்வனவு செய்த பின்னர் முற்பணங்களை தீர்ப்பனவு செய்து சொத்துக்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 110(ii) ஆம் பிரிவு | வாகன விபத்துக்கள் தொடர்பில் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பில் பதிவேடொன்றினை பேணுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான எழுதுவினைஞருக்கு அறிவுறுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 132,500,160 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,556,263 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 86,943,897 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நடப்பாண்டின் மீண்டெழும் மானியங்கள் மற்றும் நிறுவன வருமானங்களின் அதிகரிப்பு போன்றே செயற்பாட்டு செலவினங்களின் குறைவு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 512 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் தெஹிவளை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தலைமைத்துவ பண்புகள் அபிவிருத்தி நிலையக் கட்டிடத்தின் பணிகளை நிறைவு செய்திருந்த 5 தளங்களில் 3 தளங்கள் மாத்திரம் ரூபா 113.8 மில்லியன் செலவினத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய இரு தளங்களினதும் பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தினால் இக்கட்டிடம் அறிக்கைத் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | கட்டிடத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்து தெஹிவனை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு 2022.03.26 ஆந் திகதி கல்வி அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய நிலைக்கு உள்ளாகி பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தெஹிவளை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் மின்சார | தெஹிவளை உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்காக மொத்த | ஒப்பந்த பணிகளை மேற்கொள்ளும் போது அதனுடன் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினத்தை குறைக்கும் நோக்கில் சூரியவலு கட்டமைப்பை பொருத்துவதற்காக ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கட்டமைப்பினை பொருத்துவதற்குரிய ஆரம்ப பணி ரூபா 19.8 மில்லியன் செலவிடப்பட்டு 2019 யூன் 07 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டமைப்பினை செயற்படுத்துவதற்காக மின்சார இணைப்பினை பெற்றுக் கொள்வதற்கு அறிக்கையின் திகதி வரையிலும் தவறியிருந்த காரணத்தினால் 2019 யூன் முதல் 2021 திசெம்பர் வரையிலும நிறுவனத்தில் மின்சாரத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 3.4 மில்லியன் செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | மின்சார இணைப்பினை பெற்றுக் கொள்வதற்காக உரிய கூறுவிலைகள் கோரப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டு மேலதிக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | தொடர்புடைய பணிகளையும் ஒப்பந்த பணிகளுடன் இணைந்ததாக தாமதமின்றி நிறைவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கண்டி உயர்தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்தின் கீழ் தவவெல உயர்தொழில்நுட்ப கற்கைகள் பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் கற்கைள் அல்லது நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெறாதுள்ள போது 2021 சனவரி முதல் 2022 மே வரையிலும் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக நீர், மின்சாரம், சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள் பொன்றவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 4.9 மில்லியனானது விளைவற்றதாகியிருந்தது. | இந்த தவவெல வளாகத்தினுள் கட்டங்களை நிர்மாணித்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப் படாதிருந்ததுடன் கற்கை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிர்வாக ரீதியில் நிலையான தன்மையொன்றை ஏற்படுத்த வேண்டியமையால் அதற்கு தேவையான பதவியணி சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. | தவவெல உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கல்வி மற்றும் நிர்வாக பணிகளை துரிதமாக ஆரம்பித்து விளைவற்ற செலவினங்கள் மேற்கொள்ளப் படுதல் நிறுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு கொழும்பு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் சிவில் பொறியியலாளர் பாடநெறிக்கு மற்றும் இலத்திரனியல் பொறியியல் பாடநெறிக்காக அதன் இயலுமைக்கமைய இணைத்துக் கொள்ளக் கூடிய உச்ச மாணவர்களின் எண்ணிக்கை 260 ஆக உள்ள போது அந்த அளவினை விஞ்சி 640 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்தினால் மேலதிக மாணவர்களுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பின் அடிப்படையில் காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய உயர்தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்திற்கு பாடநெறிகளுக்கு சேர்வதற்குரிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்புடன் செயற்படுவதுடன் உரிய நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிறுவனத்தின் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு பெற்றுக் கொண்டுள்ள தகைமைகளின் அடிப்படையில் பாடநெறிகளுக்கு சேர்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும். |
| (உ) | யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்தில் நான்கு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவன ஒப்பந்தக் கம்பனிக்கும் 2016 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 36.9 மில்லியன் தொழில்ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தனியார் தரப்பினரால் காணியின் உரித்து தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட | சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இணங்குவதுடன் தொடர்ந்தும் வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையாதுள்ளமையால் தீர்ப்பனவு செய்வதற்கு முடியாதுள்ளது. | காணியின் உரித்தினை தீர்ப்பனவு செய்யாது நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பாதிருப்பதற்கு வழக்கு காரணமாக அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டிடத்தின் நிர்மாண இடத்தின் வழக்கு நடவடிக்கைகள் நிறைவடைந்ததுடன் உடனடியாக முற்பணத் |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் 2017 மார்ச் 09 ஆந் திகதி முதல் குறித்த காணிக்கு பிரவேசித்தல் நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அறிக்கையின் திகதி வரிலும் முற்பணத் தொகையினை தீர்ப்பனவு செய்திராததுடன் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளும் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது. | | தொகையை தீர்ப்பனவு செய்து நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 8 மாவட்டங்களில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு 03 முதல் 12 வருட காலப்பகுதியினுள் உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனம் நடாத்திச் செல்லப்படும் காணியினை சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு அறிக்கையின் திகதி வரையிலும் தவறியிருந்தது. | காணி தொடர்பில் சட்டரீதியாக சுவீகரிக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டினுள் அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய பதுளை (புதிய காணி) இற்கு செலுத்த வேண்டிய பணம் கட்டுப்பாட்டுச் சபையின் இணக்கப்பாடுடன் செலுத்தி சட்டரீதியாக சுவீகரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய காணிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணிகளை உரிய முறையில் சட்டரீதியாக்கும் பணிகளை துரிதப்படுத்தி குறித்த காணிகளை நிறுவனத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் தனியார் வழங்குனர் ஒருவரினால் நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 4 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்காத காரணத்தினால் வழங்குனரினால் மீள எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் | பொருட்களை விநியோகித்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் நிறுவனத்திற்கு வருகை தந்து பொருட்களை பார்வையிட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய கால அட்டவணையொன்று பின்னர் வழங்கப்படுமென உறுதியளித்துள்ளனர். எவ்வாறான போதிலும் இது தொடர்பில் பல்வேறு | பெறுகை நடைமுறையை பின்பற்றி வழங்குனரால் நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களை பொறுப்பேற்பதற்கு முன்னர் அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்கியுள்ளதா என்பதை பரிசோதித்து |

| | | | |
|---|---|---|---|
| | குறைபாடுகளையுடைய நிலையில் நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 22.5 மில்லியன் பெறுமதியான வேலைத்தள உபகரணங்கள் அறிக்கையின் திகதி வரையிலும் சுமார் 4 வருட காலமாக நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு அல்லது மீள திருப்பி அனுப்புவதற்கு அறிக்கையின் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு நினைவுறுத்தல்கள் அனுப்பப்பட்டு அவர்களால் பதில் வழங்கப்படாத காரணத்தினால் மேலதிக பணிகளை முன்னெடுக்க முடியாதிருந்தது. இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து செயற்படுகின்றேன். | பின்னர் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஏதேனும் பொருத்த மின்மைகள் காணப்படின் குறித்த பொருட்கள் நிராகரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | சுத்திகரிப்பு சேவைக்கு உரிய பெறுகைகளை பெறுகைகள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை மீறுதல் தொடர்பில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஒருவர் 2018 ஆம் ஆண்டில் குற்றம்சாட்டலுக்கு உள்ளாக்கப்பட்ட காரணத்தால் அவ் உத்தியோகத்தரை பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எதிராக அறிக்கைத் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த உத்தியோகத்தரின் ஒழுக்காற்று அதிகாரியாவது ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆவார். அவர் தொடர்பில் முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த ஒழுக்காற்று விசாரணை அறிக்கை இதுவரையிலும் இந்நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறவில்லை. | பணிப்பாளர் நாயகம் பதவிக்குரிய ஒழுக்காற்ற உத்தியோகத்தர் அமைச்சின் செயலாளர் என்பதால் அமைச்சின் மட்டத்தில் நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணை மூலம் குறித்த உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தலைமை அலுவலகம் உள்ளடங்கலாக 19 நிறுவனங்களுக்கு உரியதாக ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,489 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய பெறுகைகள் மற்றும் 157 செயற்பாட்டு பணிகள் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அசாதாரண முறையில் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் கூறுவிலைகள் கோரிய போதிலும் வழங்குனர்களினால் கூறுவிலைகள் முன்வைக்கப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக இந்த பெறுகைகள் மற்றும் செயற்பாட்டு பணிகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய முறையில் நிறுவனத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |